செ. கு. எண்: 134

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.6.2013

சென்னை பெருநகரக் காவல், வேப்பேரி போக்குவரத்து வாடகை வண்டி பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 9.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்ட ஆயுதப் படை ஆறாம் அணியில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்து திரு. S.அருள் அவர்கள் 19.5.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. G.ரவிச்சந்திரன் அவர்கள் 20.5.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், கல்லாவி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.எத்திராஜ் அவர்கள், உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.ராஜ்குமார் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், திருவேற்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. B.முருகவேல் அவர்கள் 23.5.2013 அன்று பட்டாபிராம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.பாலகிருஷ்ணன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்ட தமிழ்நாடு சிறப்பு காவல் படை, ஆறாம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.பாண்டி அவர்கள் 23.5.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, செக்காணூரணி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் எத்திராஜ், பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர்கள் அருள், ரவிச்சந்திரன் மற்றும் முருகவேல், முதல்நிலைக் காவலர் குமார், காவலர் ராஜ்குமார், பாண்டி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக் குறைவால் காலமான காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் எத்திராஜ், பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர் ரவிச்சந்திரன், முதல்நிலைக் காவலர் குமார், காவலர் ராஜ்குமார்; மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் அருள்; சாலை விபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் முருகவேல் மற்றும் காவலர் பாண்டி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**